2003 மே 5]

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் சொன்னதைப்போல, எந்த மெட்ரிகுலேஷன் பள்ளியிலாவது மாணவ, மாணவிகளைச் சேர்க்கிற பொழுது, அவர்களுடைய பெற்றோர்கள் பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டும், அப்படிப்பட்ட குடும்பத்தில் இருக்கிற மாணவ, மாணவிகளைத்தான் எங்களுடைய பள்ளியிலே சேர்க்க வேண்டுமென்ற நிபந்தனைகளை விதித்தால், அது நிச்சயமாக சட்டப்படி தவறு. அப்படிப்பட்ட எந்த நிபந்தனையையும் மாணவ, மாணவிகளைச் சேர்க்கிறபோது எந்த மெட்ரிகுலேஷன் பள்ளியும் விதிக்கக்கூடாது. அதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாக அனுமதிக்காது. இந்த நிபந்தனையை விதிப்பது 6 முதல் 14 வயது வரையிலான இலவச பள்ளிக் கல்விக் கொள்கைக்கு எதிரான செயலாகக் கருதப்படும். இப்படி ஏதாவது நடைபெற்றால் அரசினுடைய கவனத்திற்குக் குழந்தைகளினுடைய பெற்றோர்கள் தவறாமல்--இன்னும் சொல்லப்போனால்—பயமின்றித் தெரிவிக்கலாம். அப்படிப்பட்ட பள்ளிகள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல, சில மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்ற புகாரும் வந்திருக்கிறது. அதையெல்லாம் முறைப்படுத்தவதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, டாக்டர் சிட்டிபாபு அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்து அவர்களுடைய அறிக்கையினை நாங்கள் பெற்றிருக்கிறோம். அந்தப் பரிந்துரைகளிலே இதுவும் ஒரு பரிந்துரைதான். எனவே, நிச்சயமாக மெட்ரிகுலேஷன் பள்ளியில் கட்டண விகிதம் முறைப்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2003 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 31 மற்றும் 32 ஆகிய இரண்டு அறிக்கைக [illegible] குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.